# திருவள்ளுவர் ஞானம்

**முனைவர் வெ. இராம்ராஜ்**
**உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,**
**து.கோ. வைணவக் கல்லூரி,**
**அரும்பாக்கம், சென்னை – 600 106.**
avgramraj@gmail.com

**8**

**ஆய்வு நோக்கம், ஆய்வின் தேவை & பயன்**

உடல் இன்றியமையாமை, உள்ள உணர்வுகள், இறையியலின் தேவை, ஞானமே நிறைவான நோக்கம் ஆகிய கருதுகோள்களை மையப்படுத்தி தரவுகள் எடுத்தாளப்பெற்றுள்ளன.

கட்டுரையின் நிறைவாக, ஞானம் பெறுவது ஒன்றே மனித இனம் அடையத்தக்கது. அதுவே, முதன்மையான குறிக்கோள் என ‘திருவள்ளுவர் ஞானம்’ கூறுவது நிறுவப்பெற்றுள்ளது.

ஆய்வு முடிவுகளில், சித்தர் பாடல்கள் நேரடியான சான்றுகளைக்கொண்டு ஒருபுறம் ஆய்வுலகிற்கு உதவினாலும், மறுபுறம் தனிமனித அகவுணர்வு ரீதியிலான சான்றுகளையும் ஏற்கவேண்டும் என்ற கருத்தையும் முன்வைக்கிறது. ஏனெனில் சமயம் என்பது நம்பிக்கையின்பாற்பட்டது. எனவே, நம்பிக்கை சார்ந்த ஆய்வு முடிவுகளையும் ஆய்வுலகம் ஏற்றாலொழிய சமயம் சார்ந்த ஆய்வுகள் நடைபெறாமலேயோ போய்விடும். நடைபெற்றாலும் அவை அங்கீகாரம் பெறாமலேயே புறக்கணிக்கப்பெறும்.

பகவத்கீதை, பைபிள், திருக்குர்ஆன், குருகிரந்தம், தம்மபதம் ஆகிய சமய நூல்களைக் கடந்த ஆய்வுகளை ஆய்வுலகம் ஏற்று அங்கீகரிக்கத் தயக்கம் காட்டுகிறது.

ஆய்வுலகம் சமயம் சார்ந்த பனுவல்களில் உள்ள உண்மைகளையும் உணர்வுகளையும் அதுவும் ஒருவித அகமனப் புரிதல்களின் இலக்கிய வெளிப்பாடே என்பதை ஏற்கத் தயங்கக்கூடாது. அதை அங்கீகரிக்க வேண்டும்.

சமயம் சார்ந்த கட்டுரைகள் என்றாலே, அவை பாடல்களுக்குப் பொருள் கூறுதல், போற்றுதல் என்ற நிலையில்தான் இருக்கும் என்று பொதுப் புத்தியிலிருந்து காணாமல், அதில் சொல்லப்பெற்றுள்ள மனித உணர்வுகள் எங்ஙனம் பகுத்தாயப்பெற்றுள்ளன? ஆய்வாளரின் நுண்மான் நுழைபுலம் கூர்ந்துநோக்கத் தக்கதாக உள்ளதா? என்பதைச் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். இனி ‘திருவள்ளுவர் ஞானத்திற்குள்’ பயணிப்போம் வாருங்கள்.

**முன்னுரை**

திருவள்ளுவர் ஞானம் எனும் இப்பகுதியில் இருபது பாடல்கள் அடங்கியுள்ளன. திருக்குறளைப் பாடிய திருவள்ளுவர் இதைப் படைக்கவில்லை. இவர் பாடியுள்ள கடவுள் வாழ்த்துப்பாடலில் திருமால், பிரமன், அகத்தியன் ஆகிய கடவுளரைப் போற்றியுள்ளார். இவரைப் பற்றி வேறு எந்தக் குறிப்பும் இல்லை. இவருடைய இருபது பாடல்களில் இருக்கும் செய்திகளைத் தொகுத்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திருவள்ளுவர் பெயரில் அறியப்பெறும் நூல்கள்**

திருவள்ளுவர் ஞானம் 20, ஞானவெட்டியான் 1500, நவரத்தின சிந்தாமணி 800, நவரத்தின சிந்தாமணி சூத்திரம் 100, பஞ்சரத்தினம் 500, கற்பம் 300, குருநூல் 50, வாத சூத்திரம் 16, முப்பு சூத்திரம் 30, முப்பு 10, நாதாந்த சாரம் 100 ஆகியன ஆகும். இவற்றை எல்லாம் இயற்றியது திருவள்ளுவர் ஞானம் இயற்றிய திருவள்ளுவர் இல்லை.

பல்வேறு காலங்களில் வாழ்ந்த திருவள்ளுவர் எனும் பெயர் கொண்ட பலர் இவற்றை இயற்றியிருக்கலாம். (ஔவையார், அகத்தியர், பட்டினத்தார் ஆகியோர் போல)

**தமிழ்**

சித்தர்கள் தமிழின் பெருமையை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் குறித்துச் சென்றுள்ளனர். அந்தவகையில் திருவள்ளுவர் ஞானத்தை இயற்றிய திருவள்ளுவரும் விதிவிலக்கல்லர். அவர்,

**‘மதுர தமிழ் ஓதும் அகத்தியனே போற்றி’**[1]

எனத் தமிழை மதுரமான தமிழ் என்றும் அதை அகத்தியர் ஓதினார் என்றும் குறிப்பிடுகிறார்.

**குருவணக்கம்**

குருவை எப்போதும் போற்றுவதாகக் கூறுகிறார். இதை,

**‘குருமுனியின் தாள் இணை எப்போதும் போற்றி’**[2]

எனும் பாடல்வரி உணர்த்துகிறது.

**இறைவன் உடலுக்குள் உள்ளான்**

பரதன் என்ற அருளாளர் ஆந்திர மாநிலத்தில் பிறந்தவர். இவர் இறைவன் நம்முளே இருக்கிறார் என்பதைத் தம் வாழ்நாள் முழுவதும் உணர்த்தி வந்தார். தலயாத்திரை என்பது நம் உடலுக்குள் நாம் பயணிப்பது என்ற விளக்கத்தை அவர் கூறிவந்தார். எனவே அவருடைய பெயர் சேத்ரய்யா (தலங்கள்தோறும் பயணித்தவர்) என்றாயிற்று. சொக்கநாத நாயக்கர், விஜயரங்க நாயக்கர் ஆகியோர் காலத்தில் அவர் வாழ்ந்தார். நாயக்கர்கள் ஆண்ட மதுரைக்கும் தஞ்சாவூருக்கும் இடையே ஆன்மிகப் பாலமாக அவர் திகழ்ந்தார். சேத்ரய்யாவைப் போன்றே திருவள்ளுவரும், இறைவன் நம்முளே இருப்பதை,

**'அண்டர் அண்ட வான் புவியும் ஆகமத்தின் உட்பொருளும்**

**கண்டு இதமாய் யான் விளங்கும் காயம் அதில் ஏறியும்'**[3]

**'உள்ளம் அதில் உண்டு என்றே உன்'**[4]

எனும் வரிகளால் எடுத்துக்காட்டுகிறார்.

**உடலினை உறுதி செய்**

இறைவன் நம்முளே இருக்கிறான் என்பதை உணர்ந்த பிறகு, அதை உறுதியாக்க வேண்டும். அதற்கான வழியைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

**'காயசித்தியால் எனது கன்ம வினை போக்கியபின்**

**மாயசித்தி மூல சுழி வாய்க்குமே – காயசித்தி**

**மூலப் புளியால் முதல் தீட்சை ஆச்சுது இனிக்**

**காலம் எண்ணிரண்டு ஆண்டில் காண்'**[5]

**'வாரி அமுரி அதை வன்னிவிட்டுக் காய்ச்சிய பின்**

**வீரியமாய் யான் உணரும் மெய்'**[6]

காயசித்தி செய்யும் வழியை அறிந்துகொள்வதுதான் முதல் தீட்சை. அதன்பின் அமுரியை உண்டு குண்டலினி நெருப்பால் யோகம் செய்ய வேண்டும். வீரியமாக உடலை உணர வேண்டும் எனும் உண்மைகளை இப்பாடல்வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

**நிலைத்து இருப்பது எது?**

உடலினை உறுதி செய்த பிறகு நிலைத்து இருப்பது எது என்று விளங்கும். அதை,

**'வீடான மூலாச் சுழி நாத வீட்டில் விளங்கும் விந்து**

**நீடாழி லோகம் தழைத்துப் பெருகியும் நின்று இலங்கும்'**[7]

எனக் குறிப்பிடுகிறார். உயிர் உற்பத்திக்கு ஏதுவான வித்துக்கள் இம்மாபெரும் உலகில் என்றும் நின்று நிலவும் எனும் அறிவியல் உண்மை இங்கு புலப்படுத்தப் பெற்றுள்ளது.

**உலகம் உணர்த்துவன**

உலகம் நமக்கு வாழ்வியல் உண்மைகளை வெளிப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் நாம்தான் அதை அறிய மறக்கிறோம். மறுக்கிறோம்.

**'... தந்தைவிதி**

**உன்னல் அழிவது உடல் உயிர் காயம் ஒழிவதும் கண்டு**

**அந்நாள் அனுப்படி கண்டும் இருந்து அறியாதவரே'**[8]

என உலக நடப்பைக் கண்டு உய்திபெறச் சொல்கிறார் திருவள்ளுவர். உடல் நாளும் அழிவை நோக்கிச் செல்வதை அறிந்தும் நாம் வீணே காலத்தைக் கழிக்கக்கூடாது. உலக நன்மைக்கான பணிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

**கோபம்**

உண்மைகளைப் பலவாறு கூறியும் தேராதவர்களைப் பார்த்துக் கோபிக்கிறார் சித்தர்.

**‘…சுகாதீதமோ வரும் சிற்றின்பத்தில்**
**ஊனற்றுக் காயம் உடல் அற்று போம் பொழுது ஒன்று அறியா**
**ஈனர்க்குச் சொர்க்கம் சுடுகாடு ஒழிய இனி இல்லையே’[9]**
**‘வந்தவழி தான் அறியா வாழ்க்கை’[10]**

என வஞ்சப்புகழ்ச்சியால் வைகிறார். அவர்களுடைய வாழ்க்கையை வந்தவழி அறியாத வாழ்க்கை எனச் சாடுகிறார். கடிந்துகொள்கிறார். உணவு, உடை, இருப்பிடம், உடலின்பம் முதலான சராசரி வாழ்க்கை நிலைகளைக் கடந்து அமைதியும் நிம்மதியும் அடைய முயற்சி மேற்கொள்ளச் சொல்கிறார்.

**வருத்தம்**

பாமர மக்கள் உண்மை உணர மறப்பதால் திருவள்ளுவர்,

**‘உன்னதம் எல்லாம் அமைத்தோன் உண்மையைக் காண்கிலரே’[12]**

**‘விண்ட ரகசியம் தன்னை விளக்கமது காண்கிலரே’[13]**

**‘வையம் அதிலே உதிக்கும் மாண்பர்களே உங்கள் உயிர்**
**மெய் என்று இருந்த இசைவு வெளிப்படுவது என்ன விதம்?**
**…பொய் எனும் இவ் வாழ்க்கை அது போகும் சுடுகாடு உளதே’[14]**

**‘தேடாது அழித்த பொருளான பொக்கிடம் தேடி என்ன**
**காடான நாடு சுடுகாடு சேர்வதும் கண்டிலரே’[15]**

**‘…பெருந்தரை எந்நாள் இருந்தும் அனித்தியமே’[16]**

என வருத்தப்படுகிறார். உன்னதம், கூறப்பெற்றுள்ள இரகசியம், உடலின் நிலையற்ற தன்மை, செல்வத்தின் நிலையற்ற தன்மை, உலக நிலையாமை ஆகியவற்றை எண்ணிப்பார்த்து நிலையான புகழுக்கும் தேவையான சமூக வளர்ச்சிக்கும் மக்கள் தங்கள் நேரத்தையும் உழைப்பையும் செலுத்தவேண்டும் என விரும்புகிறார் திருவள்ளுவர்.

**உலகோர் போல் இருத்தல்**

பின்பு கோபம் தணிகிறார். ஏதும் அறியாத பாமரர்போல் ஒதுங்கி இருந்துவிடுகிறார்.

**‘அம்புவி தன்னிலே உதித்து ஆய்ந்து அறி பாடை தன்னை**
**வம்பு உலகத்தார் வசியமாய்க் கைப் பிடித்தே பிரிந்து**
**கும்பி தனிலே உழன்றும் அக்குண்டலி பொற் கமலம்**
**நம்பி இருந்தேன் சில நாள் இரகசியம் காண்கிலனே’[11]**

மெய்ப்பொருளை இவர்கள் அறிய மறக்கிறார்களே என்று முதலில் கோபப்படுகிறார். அதுவே பின்பு அவர்கள் மீதான கருணையாக மாறுகிறது. அதனால், வருத்தம் அடைகிறார். அவர்கள் மனத்தளவில் முன்னேறி வருகின்றவரை காத்திருக்கலாம் என்று அமைதி அடைகிறார்.

**மெய்ப்பொருளை அறியார்**

'விதி' என்பது நாம் இதுவரை செய்ததே ஆகும். எதைச் சார்ந்து இயங்குகிறோமோ அதன் பிரதிபலிப்புகள் நம் வாழ்வில் தோன்றும் என்பதே 'விதி' என்ற பதம் கூறவரும் செய்தி. அத்தகு விதி அற்றவர்கள் மெய்ப்பொருளை அறிவது இல்லை என்பதை,

**'...இந்த உடல்**
**அற்பக் குழியில் அரவம் இருப்பது எனும்**
**கற்பகத்தை ஆண்டிடுமோ காண்'**[17]

எனும் இப்பாடல் மூலம் எடுத்துக்காட்டுகிறார் திருவள்ளுவர். இவ்வுடலுக்குள் மிகச் சிறியதாக உள்ள குழியில் அதாவது, மூலத்தில் குண்டலினி சக்தியாகிய அரவம் (பாம்பு) இருப்பதை நினைக்க வேண்டும். நினைத்ததை எல்லாம் தரும் கற்பகமாக அது விளங்குகிறது என்பதைப் பலர் அறிவதில்லை.

**சாவு யாருக்கு**

எது உண்மையோ - நல்லதோ அதை அறிவதே அறிவுடைமை. நன்றின்பால் உய்ப்பது அறிவு எனும் திருக்குறளைக் காண்க. மெய்ப்பொருளை உணராதவர்கள் இறப்பார்கள் என்கிறார். அதாவது, அவர்கள் புகழுடம்பு அடைவதில்லை. இறந்தவுடன் மறக்கப்படுகிறார்கள். ஒருவேளை நினைக்கப்பட்டாலும் தவறான - தீய சான்றுகளுக்காக எடுத்தாளப்படுகிறார்கள்.

**'சுழி அறியார்க்கு என்ன சுகம் அறியார்க்கு என்ன**
**வழி அறியார்க்கு என்ன எய்துமாறு – சுழி அறியா**
**மூலம் அறிந்து அவ்வழியில் முத்தி அடையார்க்கு நமன்**
**காலன் அவர்க்கே மரணம் காண்'**[18]

பேரின்பப் பெருவெளியினை உணர்ந்து சுழி அறிந்தவர்கள் முத்தி அடைவர். பிறர் வீழ்வர் என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

**இருவினையும் வேண்டாம்**

முத்தி அடைய விரும்புபவர் இருவினையும் (நன்மை – தீமை) வேண்டாம் என்பர். இது செயலற்ற நிலையைச் சுட்டுகிறது. இதனை,

**'முதல் இருந்த ஊழ்வினையை முப்பாழைச் சுட்டுப்**
**பதறா மதிபாடு பட்டேன் – முதல் இருந்த**
**நல்வினையும் தீவினையும் நாடாமலும் பிறந்து**
**வல்வினையில் போக்கிவிட்டேன் வாழ்வு'**[19]

எனும் இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**விதி அற்றவர்கள்**

இருவினையும் இல்லாதவர்கள் விதியின் பிடியில் சிக்குவது இல்லை. அவர்கள் விதி அற்றவர்கள் ஆவர். இதனை,

**‘அஞ்சு பஞ்ச பூதம் அறிந்தால் அனித்தியம் போம்**
**அஞ்சு வசப்படுவது ஆண்டு அதனில் – அஞ்சினையும்**
**கண்டு அறிவோர் ஞானக் காட்சி அதின் இனைவு**
**விண்டு அறியலாமே விதி’**[20]

எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். ஐம்பூதங்களின் தன்மைகளை உணர்ந்தவர்கள் ஞானக்காட்சிகளைக் காண முடியும். அவர்களை விதி ஒன்றும் செய்யாது. இங்கு ஐந்து என்பது ‘மூலாதாரம் முதல் விசுத்திவரை உள்ள ஐந்து ஆதாரம்’ என்பதை உணர்க. உலகியலாகக் கூறவேண்டும் என்றால் இடுப்பு முதல் மிடறு வரையுள்ள உடலின் பகுதிகளினால் செய்யப்பெறும் செயல்கள்.

**ஞானமே நோக்கம்**

அறிவாளிகள் கூறுபவை அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப மாறுபடும். ஞானிகள் கூறுபவை முக்காலத்திற்கும் பொருந்தும். எனவேதான் சித்தர்கள் ஞானத்தை நோக்கமாகக் கொண்டனர்.

**‘ஞானம் அறிந்தோர்க்கு நமன் இல்லை நாள்தோறும்**
**பானம் அதை உண்டு பசியினால் – ஞானம் அது**
**கண்டால் உடல் உயிரும் காயம் வலுவாகும்**
**உண்டால் அமிர்த ரசம் உண்’**[21]

அமிர்த ரசம் என்பது குறித்து பல்வேறு தகவல்கள் கூறப்பெறுகின்றன. சிவசம்பு (அமுரி) என்றும் கூறுவர். உப்பின் கசடு. உடலில் தோன்றும் உப்புநீர். சிறுநீர் என்றும் கூறுவர். ‘அமுரிதாரணை’ என்பதைக் காண்க. சிறுநீர் மருத்துவம் என்ற மருத்துவமுறையும் இக்காலத்தில் சித்த மருத்துவர்களால் கூறப்பெறுகிறது என்பதை ஓர்க.

**நிறைவாக**

பூசை செய்யும் விதிகளை அறிந்து வழிபட வேண்டும். மலர் வழிபாடு, ஒளி வழிபாடு, ஒலி வழிபாடு, கிரிவலம், தலயாத்திரை, புனிதநீராடல் ஆகியவற்றை எல்லாம் எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறிந்து செய்ய வேண்டும். இதன்மூலம் இறையருளை – ஆன்ம அனுபவத்தைப் பெறமுடியும். உலகமும் மகிழ்ச்சியும் நன்மையும் அடையும். இதனை,

**‘எண் சாணாம் தேகம் எடுத்தால் என் ஆண்டையே**
**பெண் சாரல் நீக்கியே பேரின்பம் – கண் காணத்**
**தேகம் ஒழியாமல் சித்தி பெறுஞானம்**
**யோக சித்தி பூசை விதி உன்’**[22]

என்கிறார் திருவள்ளுவர். **‘இடைகலையின் சுழுமுனையின் கமலம் போற்றி’**[23] **‘குண்டலிக்குள் அமர்ந்துநின்ற குகனைப் போற்றி’**[24] ஞானத்தவம் செய்வோம். ஞானம் பெறுவோம்.

**நிறைவின் நிறைவாக**

அன்பு, அறிவு, அருள் ஆகிய படிநிலைகளைக் கடந்த நிறைவான நிலையே ஞானம் ஆகும். இதை ஆய்வுலகம் ஏற்று அங்கீகரிக்க வேண்டும்.

சமய இலக்கிய ஆய்வுகள் போற்றலையும் புகழ்தலையும் நோக்கமாகக் கொண்டவை அல்ல. அவை மாபெரும் உணர்வுகளால் நிரம்பப் பெற்றவை என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சமய இலக்கியங்களைப் படைப்போர், அவற்றை ஆய்வு செய்வோர் ஆகியோரின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. திருவள்ளுவர் ஞானம் – 1
2. திருவள்ளுவர்ஞானம் – 1
3. திருவள்ளுவர் ஞானம் – 4
4. திருவள்ளுவர் ஞானம் – 16
5. திருவள்ளுவர் ஞானம் – 15
6. திருவள்ளுவர் ஞானம் – 17
7. திருவள்ளுவர் ஞானம் – 6
8. திருவள்ளுவர் ஞானம் – 8
9. திருவள்ளுவர் ஞானம் – 9
10. திருவள்ளுவர் ஞானம் – 10
11. திருவள்ளுவர் ஞானம் – 3
12. திருவள்ளுவர் ஞானம் – 2
13. திருவள்ளுவர் ஞானம் – 4
14. திருவள்ளுவர் ஞானம் – 5
15. திருவள்ளுவர் ஞானம் – 6
16. திருவள்ளுவர் ஞானம் – 7
17. திருவள்ளுவர் ஞானம் – 10
18. திருவள்ளுவர் ஞானம் – 12
19. திருவள்ளுவர் ஞானம் – 14

20. திருவள்ளுவர் ஞானம் – 19
21. திருவள்ளுவர் ஞானம் – 11
22. திருவள்ளுவர் ஞானம் – 20
23. திருவள்ளுவர் ஞானம் – 1
24. திருவள்ளுவர் ஞானம் – 1

**பயன்கொண்ட நூல்கள்**

திருவள்ளுவர் ஞானம், அறிவொளி (பதிப்பாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை – 600 017, பதிப்பு 2010.

பெரியஞானக்கோவை, ஆசிரியர்குழு, ரத்தினநாயக்கர் & சன்ஸ் பதிப்பு, வள்ளலார் நகர், சென்னை – 600 081, பதிப்பு 1995.

சித்தர் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் சாலை, பிராட்வே, சென்னை – 108.